"அரிஞர் அண்ணா" [illegible stamp]
"மாலை மணி"

சந்தா விபரம்

ஆண்டொன்றுக்கு ரூ. 24-0-0
ஆறு மாதத்திற்கு ரூ. 12-0-0
மூன்றுமாதத்திற்கு ரூ 6-0-0
ஒரு மாதத்திற்கு ரூ. 2-2-0
சென்னைக்குமட்டும் ரூ. 2-0-0

Regd. No. M. 5458 | விலை அணா ஒன்று | இலங்கை 10 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ்த் தினசரி கருத்திதழ்)

'MALAI MANI'
Tamil Daily

ஆசிரியர்: மு. கருணாநிதி

Telephone No 4502

"மாலை மணி"
[illegible] விகிதம்
ஒரு அங்குலம் ஒரு பத்திற்கு ரூ. 5.
நீடித்த விளம்பரங்களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.
மானேஜர்

மலர் 3 | சென்னை 27-12-51 வியாழன் ★ வெளியூர் 28-12-51 வெள்ளி | மணி 136

நிரந்தர உணவுப் பற்றுக் குறை படலம்

டிசம்பர் கோட்டாவில் ஒரு அரிசி கூட வரவில்லை

நவம்பர் கோட்டாவுக்கு இன்னும் 8000 டன் பாக்கி

சென்னைச் சர்க்கார் விண்ணப்பத்துக்குப் பதிலே இல்லை

நம் மக்கள் எக்கேடேனும் கெட்டும் என்ற கேடுகெட்ட புத்தி

சென்னை, டிச 27—

[illegible] சென்னைக்கு மத்திய சர்க்கார் ஒதுக்கிய 25,000 [illegible] இன்னும் பாக்கி 8000 டன் அரிசியும் வரவேண்டியிருக்கிறது. இந்த வருஷக்கடைசிக்குள் சென்னைக்கு 2 லட்சம் டன் அரிசி அனுப்பி உதவுவதாக இந்திய சர்க்கார் வாக்களித்திருந்தனர். ஆனால் அந்த வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டுவிட்டது. அதை நிறைவேற்ற வேண்டுமே என்ற பொறுப்போ, அக்கரையோ, நேருவுக்கோ, முன்ஷிக்கோ சற்றேனும் இருப்பதாகத் தெரியவில்லை.

டிசம்பர் மாதக் கோட்டா 25,000 டன் அரிசியில் பத்தாயிரம் டன் மத்தியப் பிரதேசத்திலிருந்தும், 10 ஆயிரம் டன் ஒரிஸ்ஸாவிலிருந்தும் அனுப்பப்படும் என்று மத்திய சர்க்கார் முதலில் நமக்குத் தகவல் தெரிவித்திருந்தனர். ஆனால் திடீரென்று சில தினங்களுக்குமுன் மத்திய பிரதேசத்திலிருந்து வரவேண்டிய பத்தாயிரம் டன் இரண்டாயிரம் டன்னுகக் குறைக்கப்பட்டிருப்பதாக இந்திய சர்க்கார் அறிவித்திருக்கின்றனர். பாக்கி எட்டாயிரம் டன் அரிசி எங்கிருந்து வரும் எப்போது வரும் என்பதுபற்றிப் பேச்சேயில்லை. இந்த இரண்டாயிரம் டன் அரிசியில்கூட 1900 டன்னுக்குத்தான் கிடைக்குமிடங்களை மத்தியப் பிரதேச சர்க்கார் கணக்குக் காட்டியிருக்கின்றனர். இந்த அரிசியும் வர வெகு நாட்களாகும். ஆனால் பணத்தை மட்டும் அவர்கள் முன்னதாகவே கேட்டு வாங்கிக்கொண்டு விட்டனர்.

ஒரிஸ்ஸாவில் தற்போதைக்கு எங்கு அரிசியிருக்கிறது என்றே தெரியவில்லையென்றும் சென்னை அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. வராத இந்த அரிசிக்கும் முன்கூடியே பணம்பெறுவதில் ஒரிஸ்ஸா சர்க்காரும் குறியாக இருக்கின்றனராம். ஒரிசாவிலிருந்து அரிசி ஏற்றிச் சென்னைக்கு அனுப்புவதற்காகச் சென்ற சென்னை அதிகாரி வெறுங்கையுடன் சென்னை திரும்பி விட்டார். அரிசி இப்போது ஸ்டாக் இல்லை என்று தெரிவிக்கக்கூட இவர்களால் முடியாமலிருக்கிறபடியால் சென்னை யரசாங்கத்துக்குப் போக்குவரத்துச் செலவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

அரிசியாவது தற்போது கையிருப்பில் கணிசமான அளவு இருந்தால் நிலைமையைச் சமாளித்து விடலாமென்றால், சென்னை ராஜ்யத்துக்கு கோதுமை, செஞ்சோளம் அனுப்பி உதவி செய்வது பற்றியும் எவ்விதத் தகவலுமில்லை. டிசம்பர் பதினைந்தாம் தேதியன்று ராஜ்யத்தில் சுமார் 35,000 டன் கோதுமையும் சுமார் அதே அளவு செஞ்சோளமும் கையிருப்பிலிருந்தன. இது சுமார் நான்கு வாரத் தேவையை சமாளிக்கப் போதுமானது. இம் மாதம் முப்பதாயிரம் டன் கோதுமையும், அந்த அளவு செஞ்சோளமும் அளிக்க வேண்டும் என்று சென்னை சர்க்கார் கோரியதற்கு மத்தியிலிருந்து பதிலேயில்லை என்று கூறப்படுகிறது, இதைப்பற்றி வைத்துக் கொண்டே மூன்று வாரம் நிலைமையைச் சமாளிக்கட்டும் என்று மத்திய சர்க்கார் தற்போது அலட்சியமாக இருப்பதுபோல் தோன்றுகிறது என்று உயர்தர அதிகாரியொருவர் கூறினார். முடியாவிடில் சென்னை மக்கள் எக்கேடாவது கெட்டுப் பட்டினியால் செத்துத் தொலையட்டும் என்று மத்திய காங்கிரஸ் அக்ரகர்கள் எண்ணியே இவ்வாறு அலட்சியமாயிருக்கின்றனர் என்று நம்மக்கள் எண்ணுவதில் தவறுண்டோ?

ஆனால் தற்போது ஸ்டாக்குள்ள 30 ஆயிரம் டன் கோதுமை 35 ஆயிரம் டன் புன்செய் தானியங்கள், மற்றும் கொள்முதல் மூலம் கிடைக்கும் [illegible] இவற்றைக் கொண்டு அதிக [illegible]ரமமில்லாமல் ஏப்ரல் வரையில் தள்ளலாமென்று அவ்வதிகாரி கூறினார்.

கிழக்குக் கோதாவரி மேற்குக் கோதாவரி ஜில்லாக்களில் கொள்முதல் தீவிரமாக நடைபெறுகின்றன. ஆனால் கிருஷ்ணா ஜில்லாவில் மட்டும் பயிர்களை பூச்சிகள் அழித்துவிட்டதால் அதிகமான மகசூல் அங்கு தேறாது என்றும் தெரிகிறது.

நம் நாட்டின் உணவு நிலைமையில் மத்திய காங்கிரஸ் ஆட்சி எவ்வளவு அலட்சிய புத்தியுடன் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை மேலே காட்டியுள்ள அரசாங்கக் குறிப்புகளே கண்கொத்துக் காட்டுகின்றன.

காங்கிரஸ்காரர்கள் ஆக்கர்கள்; மக்கள் நன்மை மக்கள்நல் வாழ்வு என்பவற்றில் கடுகளவும் அக்கரையில்லாதவர்கள், பதவி, வெறி, சுயநலம், பண ஆசை இம் மூன்று மட்டுமே அவர்கள் கொள்கை அதை மறைத்து மேற்போக்காக காட்டுபவை தாய்தேசம், சுதந்தரம், ஜனநாயகம், சுபிட்சத்திட்டம் என்பவைகளும் கதர் சட்டைகளும் புலிகள் பசுத்தோலைப் போர்த்திக் கொள்வது போல, ராமாந்தகாரன் காஷாயம் தரித்து வேதாந்தம் பேசுவது போல, இன்று கதருடை தரித்த காங்கிரஸ் ஆக்கர் கூட்டம் தென்னாட்டு மனித குலத்தைக் கருவறுக்கக் கிளம்பியிருக்கிறது பொது மக்கள் இந்த ஆக்கர் கூட்டத்தைக் கண்டு விழிப்படைந்து, இக்கூட்டம் மீண்டும் ஆட்சிப் பீடத்திற்கு வாராதபடி செய்ய வேண்டும்.

சிங்கரேனி நிலக்கரிச் சுரங்கம்

உற்பத்தியை இரட்டிக்கும்படி வற்புறுத்தல்

ஐதராபாத், டிச. 26—

தென் இந்தியாவில் நிலக்கரித் தேவை அதிகரித்து வருவதால் சிங்கரேனி நிலக்கரிச் சுரங்கம் அதனுடைய உற்பத்தியை இரட்டிக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட நிலக்கரித் தொழில் அலுவல் குழு வற்புறுத்தியிருக்கிறது.

சென்ற ஆண்டில் சிங்கரேனி நிலக்கரிச் சுரங்கம் 11,62,000 டன் நிலக்கரியை உற்பத்தி செய்திருக்கின்றது. சென்ற ஆண்டில் அதற்கு முன் ஆண்டுகளை விட 10 சத விகிதத்திற்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

உற்பத்தியை அதிகரிக்கப் பல கருவிகளும், பொறிகளும் இச் [illegible] வருகின்றன. இதன் பயனாக 1955-ம் ஆண்டு இறுதியில் 16 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில் தேர்தல் முடிவுகள் அறிவிப்பு

மூன்று மணி நேரத்திற்குள் ஒரு தொகுதி முடிவு தெரிந்துவிடும்

சென்னை, டிச 26—

சென்னை நகரில் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதற்காக ஓட்டுகளைக் கணக்கெடுப்பது என்று என்பது இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை இது சீக்கிரத்திலேயே முடிவாகும் என்று ஓட்டுகள் கணக்கெடுக்கப்படுகிறதோ அன்று இந்த ஓட்டுகளை கணக்கெடுக்கும் வேலை காலை எட்டு மணியிலிருந்து இரவு எட்டுமணிவரை நடக்குமென்று தெரிகிறது ஒரே அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய சென்னை அசெம்பிளி தொகுதிகளில் சுமார் மூன்று மணி நேரத்திற்குள் ஓட்டுகளைக் கணக்கிட்டு முடிவு தெரிவிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ஒருநாளில் மூன்று தொகுதிகள் முடிவுகள் கூட வெளியிடலாம் என்று எதிர்பார்க்கின்றனர்.

காங்கிரஸ் கரைகிறது!

காங்கிரசுக்கு 20

எதிர்கட்சிகளுக்கு 24 ஸ்தானங்கள்

திருவனந்தபுரம், டிச. 26—

திருவாங்கூர், கொச்சி அசெம்பிளி தேர்தலில் இன்று மேற்கொண்டு ஸ்தானங்களுக்கு முடிவு அறிவிக்கப்பட்டது. இடதுசாரி ஐக்கிய முன்னணி கட்சியும், சோஷலிஸ்டு கட்சியும் தலா ஒவ்வொரு ஸ்தானம் பெற்றன.

இதுவரை காங்கிரசுக்கு கிடைத்துள்ள ஸ்தானங்கள் 20 தான் ஆனால் எதிர்கட்சிகளுக்கு மொத்தம் 24 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன.

கட்சிகளின் தேர்தல் நிலவரம் வருமாறு:—

காங்கிரஸ் — 20
இடதுசாரி ஐக்கிய [illegible]
[illegible]
கொச்சி கட்சி
சுயேச்சை

இதுவரை மொத்தம் 44 ஸ்தானங்களுக்கு முடிவு வந்துள்ளது.

விவாகரத்துகளுக்கு முக்கிய காரணம்

நியூயார்க் டிச, 27—

அமெரிக்காவில் கணவன் மனைவிகளிடையே தகராறு ஏற்பட்டு விவாகரத்தில் முடிவதன் முக்கிய காரணம் எரிந்து விழும் கோபம் தான் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கணவன் மார்களில் 18 சதவிகிதப்போ மனைவிக்கு முன்கோபம் என்கிறார்கள் மனைவிகளில் 18 சதவிகிதப்பேர் கணவனுக்கு முன்கோபம் என்கின்றனர்!

தி. மு. கழகத் தலைமை நிலையம்

சென்னையில் அமைந்துள்ள தலைமை நிலையத்திலே, அலுவலர் இதுபோது இருந்துவர இயலவில்லை. எனவே அடுத்த அறிவிப்பு வருகிறவரையில், தி. மு. கழகத் தோழர்கள், காஞ்சிபுரம் திராவிடநாடு அலுவலகத்துக்கே, தலைமை நிலையத்துக்கான கடிதங்களை அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறேன்

அன்பன்
அண்ணாதுரை

வட சென்னை தெலுங்கு செட்டியார் சங்க கட்டட நிதிக்காக

28-12-51 வெள்ளி மாலை 6 மணிக்கு

சென்னை

ஒற்றவாடை தியேட்டர்

சினிமா புகழ் திரு T. S. பாலய்யா அவர்கள் தலைமையில்

'இருவர் உள்ளம்'

(நாடகம்)

கதை, வசனம்:—D. சம்பந்தம் B. A., B. L., M. S. முத்துகிருஷ்ணன்

பாடல்கள்:—பாரதியார், பாரதிதாசன், உடுமலை-நாராயணகவி

கட்டணம் ரூ. 11, 5, 2, 1.

நாடு அழைக்கிறது!

முதலாளிகளும் பிற்போக்காளர்களும் வைதிக வெறியர்களும் காங்கிரஸ் முகாமில்!

கள்ள மார்க்கட்காரர்கள் கதர் உடையில்!

நாட்டை நாசப்படுகுழியில் தள்ளும் பொது ஜன விரோதிகள் காங்கிரசில்!

வடநாட்டுக்குத் திராவிடத்தை அடிமையாக்கிடும் தரகர்கள் காங்கிரஸ் முகாமில்!

பாட்டாளி மக்களே! ஜன நாயக வாதிகளே! இந்தப் பாசிச முகாமை முறியடிக்கும் பலம் உங்களிடம் இருக்கிறது. உரிமை இருக்கிறது.

தேர்தல், நாம் எதிர்பார்த்திருக்கும் அரிய வாய்ப்பு.

கிளம்புங்கள்! நாட்டைக் காடு ஆக்கிய நாசகாரர்களை முறியடிக்கக் கிளம்புங்கள்!

அபேட்சகர்கள் அலட்சியமாக இருந்தாலும், உங்கள் வர்வத்தி அவர்கள் உள்ளத்திலேயும் [illegible]

எங்கெங்கு, காங்கிரஸ்காரர்கள் கபட நாடகம் நடத்துகிறார்கள், விஷமப் பிரசாரம் செய்கிறார்கள், தெகிடுதத்தத் திண்ணைப் பிரசாரம் செய்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து, விளக்கம் தாருங்கள்.

காங்கிரசாட்சியால் விளைந்த கேடுகளை விளக்கும் சிறு சிறு துண்டு வெளியீடுகளை, அபேட்சகர்களை எதிர்பாராமல், வசதி சிறிதளவாவது உள்ளவர்கள், ஆளுக்கு ஆயிரம் அச்சிட்டு வழங்க முன் வாருங்கள்.

காங்கிரஸ் ஆட்சி பொது மக்களுக்குச் செய்த துரோகத்தை எடுத்துக்காட்டும் துண்டு வெளியீடுகள் எங்கும் குவியவேண்டும், பரவவேண்டும், ஒவ்வோர் வீட்டிலேயும் தரப்படவேண்டும், காலம் அதிகமில்லை! கடமையை மறப்பது கூடாது! நம்பிக்கை மட்டும் போதாது, தீவிரப்பணியாற்றவேண்டும். இன்றே இடைவிடாமல் ஒவ்வொருவரும் உற்சாகத்தோடு, கிளம்புங்கள், கிளம்புங்கள், நாடு அழைக்கிறது நற்பணி புரிய! மக்கள் அழைக்கிறார்கள், மமதையாளர்களை வீழ்த்த! பசியாலும் பட்டினியாலும் தாக்கப்பட்டு பாதி மனிதர்களான, நம் உடன் பிறந்தார் அழைக்கிறார்கள், ஆளவந்து மக்களை மாளச் செய்த கொடியவர்களை விரட்டும் திருப்பணி புரியும்படி! வாருங்கள். ஆளுக்குக் கொஞ்சம் பணி—கூட்டுச் சக்தியைக் காட்டுவோம். மாட்டுப் பெட்டிக்காரரை மண் கவ்வச் செய்வோம்.

கள்ளிக்கோட்டை "அபூர்வ" கிணறு

'நீரில் விசேஷ தன்மையில்லை'

மலபார், டிச 26—

ஏர்நாடு தாலூகா அரியலூர் கிராமத்திலுள்ள ஒரு கிணற்று நீருக்கு வியாதிகளைக் குணப்படுத்தும் விசேஷச் சக்தியிருப்பதாக வதந்தி பரவவே அதன் நீர் ரஸாயனப் பரீட்சைக்காக கிண்டிக்கு அனுப்பப்பட்டது. அதைப் பரிசோதித்த பிரதம நீர்ப்பரி சோதகர் நீரில் செம்பு பொருள் இருப்பதைத் தவிர வேறு ஒருவித விசேஷத்தன்மையும் காணப்படவில்லையென்றும் மருந்துப் பொருள்கள் எதுவும் இல்லையென்றும மேற்குக் கடற்கரையோரத்தில் இருக்கும் நீரின் குணங்களே காணப்படுவதாயும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். இத்தகவலைக் கலெக்டர் பிரசாத் ஐ.சி.எஸ். நிருபர்களிடையே தெரிவித்தார்.

சர்க்கார் தஸ்தாவேஜுகள் திருட்டுச் சம்பந்தமாக

மேலும் ஒருவர் கைது

சென்னை, டிச. 26—

சென்னை செக்ரடேரியட்டில் நடைபெற்ற சர்க்கார் தஸ்தாவேஜுகள் திருட்டு சம்பந்தமாக [illegible] இலாக்காவைச் சேர்ந்த அட்டெண்டர் நடராஜனை நேற்று குற்ற இலாகா போலீஸ் இன்ஸ்பெக்டர் பி. வெங்கடாதன் கைது செய்ததாகத் தெரிகிறது.

கிழக்குப் பஞ்சாபில் தேர்தல் ஆரம்பம்

ஸிம்லா, டிச 26—

12 மலைப் பிரதேசத் தொகுதிகளில் ஓட்டுப்பதிவுடன் பஞ்சாபில் இன்று காலை தேர்தல் ஆரம்பமாகியது இதர தொகுதிகளில் ஜனவரி 2-ம் தேதி முதல் துவங்கி 21-ம் தேதி பூர்த்தியாகும்.

ராஜ்ய சட்டசபைக்கு மட்டிலும ஒரேயொருவர் தான் காங்கிரஸ் அபேட்சகரான ஜனுப் மகமது யாஸின்கான் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென்பது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம் பாக்கி 125 ஸ்தானங்களுக்கு 842 பேரும் ஜனசபை ஸ்தானங்கள் 18-க்கு 101 அபேட்சகரும் போட்டியிடுகின்றனர் ஒவ்வொரு [illegible] திலும் சராசரியா[illegible] முதல் ஏழுபேர் வரை நிற்கின்றனர்; அதிக பக்ஷத்தொகை 13.

ராஜ்யம் பூராவிலுமாக 7500 ஓட்டுச் சாவடிகள் அமைக்கப்பட்டு மொத்தம் 125 ஆயிரம் ஓட்டுப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் விநோதங்கள்!

கல்கத்தா, டிச 26—

'எனக்கே ஓட்டுப் போடு' என்ற கோஷம் பொறித்த அட்டையுடன் இங்கு ஒரு ஒட்டகம் ஊர்வலம் வருகிறது அதனைச் சின்னமாக உடைய சுயேச்சை அபேக்ஷகரொருவருடைய ஏற்பாடு இது.

"இக்கல் மிகுந்த மேற்கு வங்கம் ஒரு பாலைவனம் போன்றது ஒட்டகம் மட்டுமே அதில் உங்களுக்கு உதவிபுரிய முடியும்" என்றும் மேற்படி அட்டையில் எழுதப்பட்டுள்ளது.

மற்றொரு அபேக்ஷகர் தம் தலைமைப் பிரசாரலயத்தின் கூரை மீது பிரும்மா[illegible] சையொன்[illegible] கிறார் [illegible] [illegible]வருடைய [illegible] வர்ண விளக்கு[illegible] அதனை அலங்கரித்து போவோர் வருவோர் கவனத்தைக் கவர்கின்றது.

காங்கிரஸ் அபேக்ஷகர்களும் சும்மா இருக்கவில்லை ஒவ்வொரு தெரு முனையிலும் நியான் விளக்கினாலான நுகம் பூட்டிய எருதுச் சின்னத்தை அவர்கள் நிறுத்தியுள்ளனர்.

மாலை மணி

[சென்]னை 27—12—51 வியாழக்கிழமை

தேர்தல்-ஒரு விளக்கம்

பொதுக் குழு மதுரையில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, ஏராளமான அபேட்சகர்களிடமிருந்து ஒப்பந்த உறுதிமொழிச்சீட்டுகள் கிடைத்துள்ளன; வந்து கொண்டுமிருக்கின்றன.

ஏற்கனவே, மாநாட்டிலே அறிவித்த பட்டியலுடன், புதிதாகச் சேர்க்கப்படவேண்டிய அபேட்சகர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மற்றும் சில இடங்களிலிருந்து வந்துள்ள சீட்டுகள், பரிசீலனையில் உள்ளன.

தி. மு. க. வின் ஆதரவை ஒப்பந்தச் சீட்டு அனுப்புவதன் மூலம்பெற உரிமை பெற்றவர்களுக்கு, நாம் எல்லாவகையான உதவிகளையும், நமது சக்தியின் முழு அளவுக்குச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆங்காங்கு உள்ள தி. மு. க. தோழர்கள், மேற்படி நண்பர்களின் வெற்றிக்காக மும்முரமாகப் பணியாற்றக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான ஆர்வம் எங்கும் எதிர்பார்த்தபடியே பொங்கி வழிந்த வண்ணம் இருக்கக்கண்டு களிப்படைகிறேன். காங்கிரஸ் பாசிசத்தை ஒழித்துக் கட்டுவது, ஒப்பற்ற திருப்பணி என்று தி. மு. [illegible] வரும் கருதவேண்டும். காங்கிரசை ஒழித்தே தீருவேன் என்று சூளுரை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் அனுப்பாத தொகுதிகள் உள்ளனவே, அங்கெல்லாம், தி. மு. க. வின் நிலை என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகின்றனர், தி. மு. க. தோழர்கள்.

ஒப்பந்தப்பத்திரங்கள் அனுப்பிய இடத்திலே, நமக்கு 'குடும்ப பாசம்' போன்ற நேசம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது. ஒப்பந்தம் அளித்துள்ளவர்களுக்குக் கழக பூர்வமான ஆதரவு தரவேண்டும்.

ஒப்பந்தம் அளிக்காத இடங்களிலே, நமக்கு வேலையே இல்லை என்று தி. மு. க. கருதவில்லை.

எல்லா இடங்களிலும் காங்கிரசை முறியடிக்கும் பணிக்கு நமது ஓட்டுகள் பயன்பட்டாக வேண்டும்.

எந்த காரணம் கொண்டும் ஒரு ஓட்டு கூடக் காங்கிரசுக்குப் போகக்கூடாது.

எனவே, தி. மு. க. வுக்கு ஒப்பந்த பத்திரம் அனுப்பவேண்டியிருக்கும் தொகுதிகளில், காங்கிரசை எதிர்க்கும் முற்போக்கு வாதிகளுக்கு, அவர்களில் சிலர் கம்யூனிஸ்டு கட்சியினராக இருந்தாலும், தி. மு. க. தோழர்கள் ஓட்டு அளிக்க வேண்டும்.

அந்தத் தொகுதிகளில் உள்ள தி. மு. கழகத் தோழர்கள், அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. [illegible] ஒப்பந்தத்தில் [illegible] படவில்லையே, [illegible] இருக்கும்போது, அவர்களுக்கு நாம் ஓட் அளிப்பானேன் என்று எண்ணிவிடக்கூடாது.

கம்யூனிஸ்டு கட்சி நமக்கு விரோதக் கட்சியல்ல, நம்மோடு ஒப்பந்தத்துக்கு வர இயலாத நிலையில் அவர்கள் இருப்பது, அவர்களுக்கோ நமக்கோ மகிழ்ச்சி தருவதல்ல, இன்றில்லா விட்டாலும் நாளை, நேசக் கட்சிகளாக இணைய வேண்டும் என்ற எண்ணத்தை, திட்டத்தை, நம்பிக்கையை நாம் இழந்துவிடக்கூடாது மேலும் காங்கிரசை ஒழிக்கும் காரியத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது.

எனவே, ஒப்பந்தம் கிடைக்காத தொகுதிகளிலும், நமது பணி, காங்கிரசை ஒழிப்பது தான் அந்த நோக்கத்துடன் அந்தத் தொகுதிகளில் உள்ள தி. மு. க. தோழர்கள் காங்கிரசை எதிர்த்து நிற்கும் அபேட்சகர்களில், முற்போக்கு வாதிகளுக்கு கம்யூனிஸ்ட் கட்சியினராக இருப்பினும் ஓட் அளிக்க வேண்டும்.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாதுபோன காரணம் ஒன்றுக்காக மட்டுமே, நாம் சில இடங்களில் கம்யூனிஸ்டு கட்சியினருக்கு ஓட் அளிக்க முடியாத நிலையிலும், ஒத்துழைக்க முடியாத நிலையிலேயும் இருக்கிறோம்-கம்யூனிசம் பிடிக்காததால அல்ல-கம்யூனிஸ்டு கட்சியினரின் 'தொண்டு' மேன்மையானது என் [illegible] அல்ல.

அவர்களிடம் ஒப்பந்தம் கேட்டோம்-பெற முடியவில்லை. வேறு சிலர் ஒப்பந்தத்தில் கை எழுத்திட்டிருக்கிறார்கள் — அவர்களிலே சிலரை நாம் ஆதரிக்க முடிவு செய்திருக்கிறோம்-அவர்களின் வெற்றி, நமது வெற்றி— நமது இலட்சிய வெற்றி— என்று பெருமிதத்துடன் கூறுகிறோம்.

கம்யூனிஸ்டுகள் எந்தத் திராவிட நாடு பிரச்சினையை ஒப்பந்த மூலம் ஏற்றுக்கொள்ள மறுத்தனரோ, அந்தத் திராவிட நாடு பிரச்சினையை ஏற்றுக்கொண்டவர்களை, நாம் ஆதரித்து வெற்றி அடையச் செய்வது மதுரையிலே நாம் எடுத்த முடிவுக்கு மதிப்பளிப்பதாகும்— நாட்டினருக்கும் திராவிட நாடு பிரச்சினை எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை எடுத்து விளக்குவதாகும்.

இது மட்டுமல்ல—வெளி நாடுகளிலேயும், திராவிட நாடு பிரச்சினையைத் தேர்தலிலே ஒரு முக்கியமான பிரச்சினையாகக் கொண்டு போட்டியிடுபவர்கள், எந்த அளவுக்கு வெற்றி பெறுகிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனிக்கிறார்கள்.

திராவிட நாடு பிரச்சினையை ஆதரிக்கிறவர்கள் தேர்தலிலே வெற்றி பெற்றால் தான், திராவிட நாடு பிரச்சினைக்கு, புதிய மதிப்பு, வெளி நாடுகளிலே கிடைக்கும். ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பிரச்சினையைக் கவனித்தாக வேண்டும் என்ற அளவுக்கு, முக்கியத்துவம் ஏற்படும்.

[illegible] இவ்வளவு மகத்தான [illegible] இருப்பதாலே தான், திராவிட நாடுபிரச்சினையை ஒப்பந்த விவகாரமாக்கினோம்.

எனவே, திராவிட நாடு பிரச்சினையை ஒப்பந்த மூலம் ஏற்றுக் கொண்டுள்ளவர்களை வெற்றி பெறச் செய்வது நமது முதல் கடமை— முக்கியமான கடமை.

ஒப்பந்த உறவு ஏற்படாத இடங்களிலே, தி. மு. க. தோழர்கள் கம்யூனிஸ்டுகளுக்கோ, முற்போக்குக் கருத்தினரான எவருக்கோ, ஓட் அளிக்க, உரிமை பெறுகிறார்கள். காங்கிரஸ் மந்திரி சந்தானத்தை வீழ்த்த கம்யூனிஸ்டு அபேட்சகர் அனந்த நம்பியாருக்கு ஓட் அளிப்பது முறை என்பதை உணராத, தி. மு. க. தோழர்கள் யாரும் இருக்க முடியாதல்லவா?

எனவே, தேர்தலிலே நமது போக்கு எப்படிப்பட்டது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு பணியாற்ற வேண்டுகிறோம்.

நமது உயிர்ப் பிரச்சினையான திராவிடநாடு பிரச்சினையை ஏற்றுக் கொண்டவர்களை வெற்றிபெறச்செய்வது நமது முதல் கடமை என்பதை மீண்டும் கவனப்படுத்துகிறேன்.

மற்றோர் முக்கியமான பிரச்சினை தேர்தல் சமயத்திலே நமக்கும், திராவிடர் கழகத் தோழர்களுக்கும் இடையே மனமாச்சரியம் ஏதும் ஏற்படாதபடி பாதுகாத்துக் கொள்வதாகும்.

கம்யூனிஸ்டுகளைச் சில தொகுதிகளிலே ஆதரிப்பது, சில தொகுதிகளிலே அவர்களுக்கு எதிராகச் சுயேச்சைகளை ஆதரிப்பது என்பது திராவிடர் கழக தேர்தல் திட்டம்.

காங்கிரசைத் தோற்கடிக்க யாருக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையே உரை கல்லாகக் கொண்டு இந்த [illegible] ஆதரிக்கப்படுவ[illegible] கிறது.

அது சரியா தவறா என்பது நமக்குத் தேவையில்லா ஆராய்ச்சி.

கம்யூனிஸ்டுகளை முழுக்க ஆதரிப்பது என்பதல்ல திராவிடர் கழகத் திட்டம் என்பது விளக்கமாகி விட்டது.

கம்யூனிஸ்டுகளை முழுக்க முழுக்க எதிர்ப்பது என்பதல்ல திராவிட முன்னேற்றக் கழகத் திட்டம்.

திராவிடர் கழகம் கொண்டுள்ள உரைகல், வெற்றி யாருக்குக் கிட்டும் என்பதாகும்.

நாம் கொண்டுள்ள முதல் உரைகல், திராவிட நாடு பிரச்சினையை, யார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதாகும்.

இரு வேறு திசைகள் மூலமாகச்சென்று பொது எதிரியைத் தாக்கும்முறையாக இதனைக் கொள்ளலாம்.

ஆனால் திராவிடர் கழகம் இம் முறையிலே, கொள்ளாமல் நமது நோக்கத்துக்கு மாசு கற்பிக்கிறது. இது, மனமாச்சரியத்தை மூட்ட வேண்டும் என்பதற்காகவே செய்யப்படுகிறது. எனவே நாம் எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும்,

என்ன காரணத்தினாலோ' திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும், முன்னது நிபந்தனையில்லாமலும், நமது கழகம் ஒப்பந்தம் பெற்றும், ஆதரிக்க முனைந்துள்ள அபேட்சகர்களின் தொகை மிக அதிகமாக இருக்கிறது. வேற்றுமை வளர வழி உள்ள இடங்கள் மிகக் குறைவு. இதனைத் தி. மு. க. தோழர்களும் தி. மு. க; மீது பழி கூறப் பழகிப்போன பண்பினரும் கவனிக்க வேண்டும்.

இதுவரை இரு கழகத்தாரும் வெளியிட்டுள்ள பட்டியலைக் கவனித்தாலும், பல ஊர்களில் நடைபெற்றுக் கொண்டு வரும் தேர்தல் வேலை முறையை கவனித்தாலும், இந்த உண்மை விளங்கும் உதிரிகளை, சுயேச்சைகளை ஆதரிக்கிறோம்— அதுவும் கேடான நோக்கத்துடன் என்று நம் மீது பழி சுமத்தப் பார்க்கும் சிலர் திராவிடர் கழகத்தில் இடம் பெற்றுள்ளனரே அவர்கள் உதிரிகளையும் சுயேச்சைகளையும் எந்த அளவுக்குத் திராவிடர் கழகமும் ஆதரிக்கிறது என்பதை, திராவிடர்கள் அறியார்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பதுதான் விந்தை! சண்டு மூட்டி விட்டுச் சிறிய அளவிலாவது சந்தோஷம் பெறலாம் என்ற எண்ணத்துடன் இந்த 'இடம் பிடித்தான்கள்' வேலை செய்து, திராவிடர் கழகத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையே மனமாச்சரியத்தை மூட்டிவிட முயலும் இதே போது, பல்ப்பல தொகுதிகளில், திராவிடர் கழகமும் காங்கிரசை முறியடிக்கும் காரியத்துக்காக ஒரே முகாமில் இருந்து பணியாற்றி வருகின்றன. இது ஒன்றே போதும் மனமாச்சரியத்தை மூட்ட எண்ணுபவர்களின் வாதத்தை வீழ்த்த. இதோ பட்டியல் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒருசேர ஆதரிக்கும் அபேட்சகர்களின் விவரம்.

தோழியர் இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள் சென்னையில் ஒரு தொகுதியில் போட்டியிடுகிறார். இரு கழகங்களின் ஆதரவும் அவருக்குத்தரப்பட்டிருக்கிறது.

சேலம், கிருஷ்ணகிரி தொகுதி [illegible] தொகுதி பி. ரத்தினசாமி, அரூர் தொகுதி, துரைசாமி கவுண்டர் அவர்கள், சேலம் தொகுதியில் பார்லிமென்ட்டுக்கு நிற்கும் தோழர் துரைசாமிப் பிள்ளை, தர்மபுரி தொகுதியில் பார்லிமெண்டுக்கு நிற்கும் தோழர் என். சத்தியநாதப் பிள்ளை ஆகியவர்கள், இரு கழகங்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள். திருச்செங்கோடு தொகுதியில் பார்லிமென்டுக்கு நிற்கும் தோழர் பேபி அவர்களுக்கும் இவ்விதமே!

போதாது, என்கிறீர்களா? சரி-இன்னும் சில கேளுங்கள்.

திருச்சி தொகுதி பார்லிமென்டுக்கு நிற்கும் டாக்டர் மதுரம் அவர்களும், திருச்சி லால்குடி தொகுதியில் சட்ட சபைக்கு நிற்கும் தோழர் ராஜா சிதம்பரமும், இரு கழகங்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள்.

வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் [சட்]ட சபைக்கு நிற்கும் தோழர் ஈ. எல். ராகவ முதலியாரும், திருவத்திபுரம் தொகுதியில் சட்ட சபைக்கு நிற்கும் தோழர் திருமலிங்கனாரும், இரு கழகங்களின் ஆதரவைப் பெறுகிறார்கள்!

தென்னார்க்காடு மாவட்டம் தோழர்கள் எஸ். எஸ் ராமசாமி திருக்குறள் முனுசாமி, கோவிந்தசாமி கச்சிராயர், ராஜாங்கம், கோவிந்தசாமி நாயகர், கோபால கவுண்டர் ஆகியோர், இரு கழகங்களின் ஆதரவைப் பெற்றுள்ளனர்.

ஆர்க்காடு, ஆரணி, இரு இடங்களிலும் இதே நிலைமை,

திருச்சி அறையூரில், இரு கழகங்களும் தோழர் ரங்கசாமி ரெட்டியார் என்பவருக்கே ஆதரவு அளிக்கின்றன,

தஞ்சை மாயவரம் தொகுதியில் தோழர் சம்பந்தம் இரு கழகங்களின் ஆதரவைப் பெறுகிறார்.

மதுரை மாவட்டம் சித்தையன்கோட்டை மணி அவர்கள் இரு கழகங்களின் ஒத்துழைப்பையும் பெற்றிருக்கிறார்.

தேனி குருசாமி அவர்கள் இரு கழகத்தின் ஆதரவையும் பெற்றிருக்கிறார்.

அரக்கோணம் தோழர் பக்தவத்சலம் இரு கழகங்களின் ஆதரவையும் பெற்றிருக்கிறார்.

அரியலூர் முத்துசாமி உடையார், இரு கழகங்களின் ஆதரவையும் பெற்றிருக்கிறார்.

தாராபுரம் தொகுதி தோழர் சேனாபதி அவர்கள், இரு கழகங்களின் ஆதரவையும் பெற்றிருக்கிறார்.

இந்தப் பட்டியலை இனியும் விரிவாக்கத் தேவையில்லை.

பலப்பல இடங்களிலே இரு கழகங்களும், ஒரே முகாமில் உள்ளன.

சில இடங்களிலே வேறு வேறு முகாம்களிலே உள்ளன.

மற்றும் சில இடங்களில் திராவிடர் கழகம் குறிப்பிட்ட சிலரை ஆதரிக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் யாரையும் கழக பூர்வமாக ஆதரிக்கவில்லை. ஓட்டுகளை கழகத் தோழர்கள் தங்கள் இஷ்டப்படி, ஆனால் காங்கிரசுக்கு எதிராகப் பயன்படுத்தும் உரிமை [illegible] வில்லை. [illegible] முன்னேற்றக் கழகம், சிலருக்கு ஆதரவு தருகிறது.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், கழக பூர்வமான ஆதரவு தரும் எல்லா இடங்களிலும், திராவிட கழகத்துடன் கூடிப் பணியாற்றும் வாய்ப்பு பெற்றிருக்கும் இடங்களானாலும் வேறு முகாமில் இருக்கும் இடமானாலும், திராவிட நாடு பிரச்சினையை ஏற்றுக் கொண்டவர்களை மட்டுமே கழக பூர்வமாக ஆதரித்திருக்கிறது.

ஒப்பந்த உறவு ஏற்பட முடியாது போன இடங்களிலெல்லாம், தி. மு. க தோழர்கள்! பொது மக்கள் போலவே ஓட்டர்கள் என்ற முறையிலே கருதப்பட்டு, அவர்களுக்கு, தி. மு. க தலைமை நிலையம், பொதுவான யோசனையை அளித்திருக்கிறது அதாவது, காங்கிரசை எதிர்ப்பவர்களிலே முற்போக்கு கருத்தினருக்கு அவர்கள் கம்யூனிஸ்டுகளாயினும், திராவிடர் கழக ஆதரவு பெற்றவர்களாயினும் அவர்களுக்கே ஓட் அளித்து, காங்கிரசை முறியடிக்க வேண்டும் என்பது தான் தலைமை நிலையத்தின் வேண்டுகோள்.

தி. மு. க வின் தேர்தல் போக்கை, இம் முறையிலே, இலட்சியம் கெடாத வகையில் அமைத்திருக்கிறது கண்டு, பாராட்டுபவர் பேரும்பாலோர் சிலர் பழி கூறுவர்—அதற்குக் காரணம், இப்போது புதிதாக முளைத்த கோபமல்ல நாம் உயிரோடு இருப்பதே தவறு என்று கருதும் உத்தமர்களின் ஆழ்ந்த, அசைக்க முடியாத அழுக்கையே இதற்குக் காரணம் அரசியல் வளர்ச்சிகளை அழுக்கையாக்குமே தந்தத்தலைவ இருக்கும் அப்படித்தான்.

நாம் அனைவரும் மனம் விட்டுப் பேசி சாதகபாதகங்களை அலசிப்பார்த்து, எடுத்த முடிவு மதுரைத் தீர்மானம்.

அதனால் திராவிடச் சமுதாயம் மகத்தான நற்பலனை அடையப் போகிறது.

இந்த அரிய வாய்ப்பை உணர்ந்து, தி. மு கழகத் தோழர்கள் தேர்தல்பணியிலீடுபட்டு, தி. மு. கழகத்துக்கு வாகை தேடித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாழ்க திராவிடநாடு! வளர்க தி. மு. க.!

அண்ணாதுரை

காங்கிரசுக்காரரின் அட்டூழியம்

கள்ளக் கையொப்பம் இடவும் அஞ்சுவதில்லை

பொது மக்கள் இவர்களை நம்பலாமா?

திருமங்கலம் டிச 27—

'திருமங்கலம் தொகுதி ஓட்டர்களான ஜனங்களுக்கு விண்ணப்பம்' என்ற தலைப்போடு விருதுநகர் ஆனந்தா அச்சகத்தில் 15—12—51ல் அச்சிடப்பட்டு அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கிறது அதில் கண்டுள்ளபடி அடியில் கையொப்பமிட்டிருக்கிற நாங்கள் காங்கிரசையோ, ராஜாராம் நாயுடுவையோ ஆதரித்து என்றும் வேலை செய்ததில்லை எங்களுடைய சம்மதத்தைப் பெறாமல் க. வெள்ளாகுளம் ஏ. ராமசாமி நாயுடு என்ற பெயர் போட்டு அடியில் மற்றும் எங்களுடைய பெயர்களையும் சேர்த்து நாங்கள் காங்கிரசுக்கு ஆதரிப்பதாகப் போட்டிருப்பது முற்றிலும் பொய்யும் போர்ஜரியும் ஆகும் பொது மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்குவதற்கென்றே வெளியிடப்பட்ட அறிக்கை அது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் உண்மையாதெனில் திருமங்கலம்தொகுதி சட்டசபைக்கு அபேட்சகராக நிற்கும் மாணிக்கவாசகம் அவர்களையும் மதுரை தொகுதி மக்கள் சபைக்கு அபேட்சகராக நிற்கும் கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்களையுமே நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம் என்பதையும் ஓட்டர்களான ஜனங்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம் என்று ச. பெ. அ. பெருமாள்சாமி நாயக்கர், பி. வெங்கிடசாமி நாயக்கர் ஏ. வெங்கிடசாமி நாயக்கர் ச. பெ அழகர் சாமி நாயுடு ராம[illegible] நாயுடு, திருவடி [illegible] மோரில் ராமசாமி [illegible] சாமி நாயக்கர் [illegible] தெரிவிக்கின்றனர்.

வானொலி கேட்கும் கோழிகள்

அதிக முட்டைகள் இடுகின்றனவாம்

லண்டன், டிச, 29—

இங்கிலாந்தில் எஸ்ஸெக்ஸ் எனும் ஊரிலிருக்கும் ஒரு கோழிப்பண்ணையிலுள்ள 2000 கோழிகள் ஒவ்வொரு நாளும் பி பி சி வானொலியின் ஒலிபரப்பைக் கேட்கின்றன. இவ்வொலிபரப்புகளைக் கேட்பதால் கோழிகளுக்கு மன நிறைவு ஏற்பட்டு அவைகள் அதிக முட்டைகளை இடுகின்றன என்று அக்கோழிப்பண்ணையின் உரிமையாளரான ஏர்னஸ்ட் நம்புகிறார்.

எவரெஸ்ட் மீது ஏற ரஷியர் ரகசிய திட்டம்?

லண்டன், டிச 28—

அடுத்த வசந்த காலத்தில் எவரெஸ்ட் மலைமீது ஏற ரஷ்யர்கள் இரகசியமாக திட்டம் வகுக்கின்றனர் என்று ராயல் ஜியாகரபிகல் சொஸைட்டி ஆல்பைன் கிளப்பிலிருந்துத் தகவல் கிடைத்திருக்கிறது

இந்த ரஷ்ய கோஷ்டியில் 150 பேர்கள் இருக்கின்றனராம்.

இப்போது திபேத் சீனர் வசமிருப்பதால் ரஷ்யர்கள் மலை ஏறுவது சுலபமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

அடுத்த வருடம் 29000 அடி உயர மலைமீது ஏற மூன்று நாடுகள் போட்டியிடும் அவை பிரிட்டன் ஸ்விட்ஜர்லாந்து ரஷ்யா.

பொன்னேரி அசெம்பிளி தொகுதி

தேர்தல் ஜனவரி 11உ நடைபெறும்

சென்னை, டிச. 26—

பொன்னேரி அசெம்பிளி தொகுதிக்கு செல்லத்தக்க அபேட்சகர் ஜாபிதாவை அத்தொகுதியின் ரிடர்னிங் அதிகாரி ஜி. எம். ஒபிட் இன்று பிரசுரித்திருக்கிறார்.

இவ்வாறு உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்ட ஜாபிதாவில் அபேட்சகர்களின் பெயர்களும் அடையாளச் சின்னங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஜாபிதாவில் பிரசுரிக்கப்பட்டுள்ள விவரம் வருமாறு:

எம். பக்தவத்சலம் (காங்) நுகத்தடி பூட்டிய இரு காளைகள்

ஓ. செங்கம் பிள்ளை [ஷெ. வ பிரஜா கட்சி] கருப்பு வட்டத்தின் மத்தியிலுள்ள குடிசை.

கே. கஜபதி [சுயே] -குடிசை.

பி. பி. ஜீவரத்தினம் [ஷெ வ சுயேச்சை]-அம்பும் வில்லும்

எம். வி. லக்ஷ்மண பிள்ளை [ஷெ வ காங்கிரஸ்]-கருப்பு வட்டத்திலுள்ள நுகத்தடி பூட்டிய இரு காளைகள்.

மணவாளன் [ஷெ வ. சம்மேளனம்] கருப்பு வட்டத்தின் மத்தியிலுள்ள யானை.

வி. வெங்கடகிருஷ்ண சர்மா [சுயே]-புஷ்பம்.

பொன்னேரி தொகுதியிலுள்ள இரண்டு ஸ்தானங்களுக்கும் ஜன. 11-ந் தேதி தேர்தல் நடைபெறும் ஒரு ஸ்தானம் ஷெட்யூல்டு வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய கண்ணாடிக் கற்கள்

மழை, வெய்யில் முதலியவற்றால் உடையாமல் இருக்க கண்ணாடிக் கற்களை ரஷியா கண்டு பிடித்திருப்பதாக மாஸ்கோ ரேடியோ அறிவித்தது.

தொழிலாளர்கள் ஓட்டுச் செய்ய

தேர்தல் தினத்தன்று லீவு விட வேண்டும்

சென்னை, டிச. 26—

தேர்தலின்போது தொழிலாளர்கள் ஓட்டுச் சாவடிக்குச் சென்று ஓட்டுகள் பதிவு செய்வதற்கு அனுகூலமாக அந்தந்த தொகுதிகளை சம்பந்தப்பட்ட தேர்தல் தினத்தன்று தொழிலாளர்களுக்கு சம்பளமில்லாத ரஜா கொடுக்கலாம் என்று சென்னை சர்க்கார் ராஜ்யத்தில் உள்ள பாக்டரிகளுக்கும் தொழிற் ஸ்தாபனங்களுக்கும் யோசனை கூறியுள்ளனர்.

இம்மாதிரி விடப்படும் லீவுக்கு ஈடாக வழக்கமாக விடப்படும் வார விடுமுறை தினங்களில் அந்தந்த தொழிற்சாலைகளும் பாக்டரிகளும் வேலை செய்யலாமென்றும் அறிவிக்கப்படுகிறது.

ஒரு தொழில் ஸ்தாபனத்தில் இரண்டு வெவ்வேறு தொகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் இருப்பினும் அவர்கள் சௌகரியம் பொருட்டு அந்த இரண்டு தொகுதிகளுக்கும் குறிக்கப்பட்டுள்ள இரண்டு தேர்தல் தேதிகளிலும் லீவு விடப்பட்டு இரண்டு வார விடுமுறைகளை ரத்து செய்யலாம்.

கோஷ்டிகளாகச் சேர்ந்து ஒரு காரியத்தை செய்து முடிக்கும், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட தொழிற் ஸ்தாபனங்கள் தொழிலாளர்கள் கோஷ்டி கோஷ்டியாக வோட்டுச் சாவடிக்குச் சென்று வோட்டுகள் போட்டு விட்டுத் திரும்ப வசதியளிக்கவும் வேண்டும் என்றும் இது விஷயங்கள் தொழிற் ஸ்தாபனங்களின் நிர்வாகஸ்தர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் சர்க்கார் கோரியுள்ளனர்.